பாடம்-19

# பெண்ணியம்

## 19.1 முன்னுரை

காலம் காலமாக பெண்களை அடிமைப்படுத்தி வீட்டுக்குள் அடைத்து வைத்திருந்த காலம் மாறி, பெண்கள் இன்று நாட்டின் உயர்விற்கு, அரசியலிலும் பொருளாதாரத்திலும் தங்கள் பங்கை ஈட்டி வருவது கண்கூடு. இது ஏதோ ஓரிரு நாட்களில் வந்துவிட்ட மாற்றமல்ல, பல ஆண்டுகளாக பலரின் தூண்டுதலின் பேரில் பெறப்பட்ட முன்னேற்றமாகும். இவற்றின் வளர்ச்சியைப் பற்றி இனிவரும் பாடப்பகுதியில் காண்போம்.

## 19.2 நோக்கங்கள்

இப்பாடப்பகுதியை முற்றிலும் படித்துமுடித்தபின், உங்களால் பின்வருவற்றை எளிதாக புரிந்துக் கொள்ளமுடியும்.

- பெண்ணியம் என்பதன் பொருள் விளக்கம்.
- பெண்ணிய இயக்கங்களின் உலகளாவிய பணிகள்
- இந்தியாவில் பெண்ணியத்தின் பங்கு

## பாட அமைப்பு


19.1 முன்னுரை

19.2 நோக்கங்கள்

19.3 பாட அறிமுகம்

19.4 பெண்ணியம் பொருள் விளக்கம்

19.5 பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

19.6 தொகுப்புரை

19.7 முக்கியச் சொற்கள்

19.8 தன்மதிப்பீட்டு விடைகள்

19.9 மாதிரி வினாக்கள்


Scanned with CamScanner

## 19.3 பாட அறிமுகம்

மண்ணோடு தொடர்புடைய மானிட வாழ்க்கையில் மாற்றங்கள் என்பது கால வளர்ச்சியால் கால் ஊற்றி வளர்ந்து வருகிறது. இதன் அடிப்படையில் சில புதிய இயக்கங்கள் தோன்றி மனித எண்ணங்களை திசைத் திருப்பி பருவக்காற்று போல் வீசி வருகின்றன. அவற்றுள் உலகளாவிய நிலையில் இன்று பேசப்படுவது 'பெண்ணியம்'. இவற்றைப் பற்றிய கோட்பாடுகளையும், இயக்கங்கள் சமூகத்தின்பால் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் இப்பாடப்பகுதி விளக்கியுள்ளது.

## 19.4 பெண்ணியம் பொருள் விளக்கம்

'பெண்ணியம்' என்ற சொல் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இச்சொல் Femina என்ற 'இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்தது. Femina என்ற சொல்லுக்கு 'பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள (having the Qualities of Female) என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

1. 1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதனடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1890ம் வருடம் 'Womanism' என்ற சொல்லினிடத்தை Feminism என்ற சொல் பெற்றது. 1894ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கில அகராதியில் முதன் முதல் இச்சொல் பயன்ப படுத்தப்பட்டது. ரேஸ்ரேசை என்னும் தீவிரப் பெண்ணிய வாதியின் வாழ்க்கையை வைத்து பெயரிடப்பட்டது.

2. பெண்ணியம் என்பதை 'தத்துவம்' இயக்கம், கோட்பாடு' என்ற நிலைகளில் விளக்குகின்றனர்.

3. பெண்ணியம் என்பது ஆண் மேலாதிக்கத்தையும் ஆண்களின் உரிமைகளையும் எடுத்துரைத்து அவர்களைப் போன்றே, தாமாகச் சிந்தித்து முடிவெடுத்து செயற்படும் தன்மையை பெண்களிடம் வளர்ப்பதும் என்கிறார்கள்.

4. பெண்களின் எல்லாச்சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்கி, அதன் மூலம், உலகளவில் அரசியலில், பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும், ஆண்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்துவதே பெண்ணியம் என்கிறார் 'சார்லட் பன்ச்'

5. பெண்ணியம் என்பது உலகையே மாற்றி அமைக்கும் இயக்கம்' என்கிறார் தெரசா ப்ளிஸ்டன்.

6. ரோஸலின்ட் டெல்மார் என்பவரும் பெண்களின் நிலையை மாற்றுவதே பெண்ணியம் என்கிறார்.

Scanned with CamScanner

7. பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதே பெண்ணியம் என்கிறார் 'ரே ஸ்டான்கி'

இவ்வாறு உலகளாவிய நிலையில் பெண்ணியம் பற்றி விளக்கம் அளிக்கப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் நோக்கினால் பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும், பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பவர் அல்லது பாடுபடுபவர் என்பதும் விளக்கம் பெறுகிறது.

இவற்றிலிருந்து வேறுபட்டு பெண்ணியத்தை கீழ்வருமாறு விளக்குகிறார் 'டாக்டர் சேதுமணி மணியன்' என்பவர். "நடை முறையில் மிகத்தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்ற கருத்துப்படிவங்களுள் (Concepts) ஒன்று 'பெண்ணுரிமை' ஆகும். பெண்ணுரிமை என்றால் ஏதோ ஆண்களுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்துவது என்றோ, ஆராய்ச்சியே இல்லாமல் மரபுகளை உடைத்துக் கொண்டு புதுவிதமாக வாழ்வது என்றோ, பெண்கள்தான் உயர்வு என்ற நிலை நாடுவது என்றோ, பெண்கள் மட்டுமே பங்கு பெற வேண்டிய உரிமைப்போர் என்றோ கருதப்படும் போக்கு பரவலாகி வருகிறது. இவற்றுள் எதுவும் பெண்ணுரிமை இல்லை. இவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்டது அது. மனிதன் என்ற முழுமையினைப் புரிந்து கொள்ளும் போதுதான் பெண்ணுரிமையையும் புரிந்து கொள்ள முடியும் என்கிறார்.

ஆனால் உண்மையாகக் கூறவேண்டுமானால் 'பெண்ணியம்' என்பது விலங்கிலிருந்து வேறுபட்ட பண்பினைஉடைய மனிதத்தைச் சார்ந்தது. அந்த மனிதத்துள் 'புரிந்துக் கொள்ளுதலே' பெண்ணியம் எனலாம். சுருங்கக் கூற வேண்டுமானால் மனிதத் தன்மையோடு நடத்தப் படுதலும் நடந்துக் கொள்ளுதலே பெண்ணியம் என்று கூறுவது பொருத்தமாக அமையும்.

## 19.5 பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இந்த இயக்கத்தின் வித்து ஐரோப்பாவில் கி.பி. 1400இல் இடப்பட்டது. கி.பி. 1789 வரையில் மிதமான வளர்ச்சியடைந்துள்ளது. ஆண் வர்க்கத்தை எதிர்த்துப் போராட்டம், பாலியல் உறவு, சமூக மதிப்பு என்ற மூன்று நிலைகளில் இருந்தது.

1. 1830இல் அமெரிக்காவில் தோன்றியது. சூசன் ஆண்டனி, லூசி ஸ்டோன் போன்ற பெண்மணிகள் இவ்வியத்தின் முக்கிய உறுப்பினர்களாக விளங்கினர்.
2. 1840இல் – லண்டனில் 'உலக அடிமை ஒழிப்பு மகாநாடு நடத்தப்பட்டது.
3. 1848ல் நியூயார்க்கில் (அமெரிக்காவில்) செனகா பால்ஸ் என்ற இடத்தில் லுக்கிரிடியா மாட், எலிஸபெத் கேடி என்ற இருபெண்கள் மாநாட்டை நடத்தினர்.
4. 1869இல் அமெரிக்காவில் சூசன் ஆண்டனி, எலிசபெத் கேடி என்பவர்கள், ஒட்டுரிமைக்காகவும், குடி ஒழிப்பிற்காகவும் தீவிரமாகப் போராடினார்கள்.

Scanned with CamScanner

5. தொடர்ந்து 1920வரை ஓட்டுரிமை கோரும் இயக்கங்கள் வளர்ந்தன. இதன் பிறகு 4 குழுவாக இவை பிரிந்தன. இதன் பிறகு பெண்களிடையே மாற்றம் ஏற்படத் தொடங்கியது. சோஷலிச உணர்வு தலை தூக்கியது.

6. இங்கிலாந்தில் ஓட்டுரிமை மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு 1930ல் பெண்கள் குட்டை முடி வைத்துக் கொண்டும், அரை கால்சராய் அணிந்து கொண்டும், சிகரெட் பிடித்துக் கொண்டும் வீட்டை விட்டு வெளியில் வந்து பொது காரியங்களில் ஈடுபடத் தொடங்கினர். அநேகப் பெண்கள் திருமணம் வேண்டாம் என்று முடிவெடுத்தனர்.

7. பிரிட்டனில் 1953இல் 'ராணி எலிசபெத்' பதவி ஏற்ற பிறகு பெண்களின் நிலைமை சீர்படத் தொடங்கியது. பாலியல் சமன்பாடு இவர் ஆட்சியில் ஏற்பட்டது. ஆண், பெண் இருபாலாரும் உழைத்து, பணத்தை விருப்பம் போல் செலவு செய்தனர்.

8. 1961ல் 'ஜான் எப். கென்னடி' பெண்களின் தகுதி பற்றி ஆராய ஒரு குழுவை நிறுவினார். அமெரிக்க பெண்களின் முன்னேற்றத்திற்கு இக்குழு வழிவகுத்தது.

9. 1964 முதல் 1968 வரையில் பெண்ணிய இயக்கம் 3 பிரிவாக மாறியது. (1) தாராளவாதப் பெண்ணியக்கம் (பெண்களுக்கான அமைப்பு) (Liberal eminism) (2) தீவிர வாதப் பெண்ணியக்கம் (பெண்களாகிய அமைப்பு) (Radical Feminism) (3) சமதர்மவாத சமூகமாற்றம்) பெண்ணியம் (Socialistic Feminism)

10. 1967ல் வேலை வாய்ப்பில் ஆண், பெண் என்று குறிப்பிடப்படுவது கூட தடைச் செய்யப்பட்டது.

11. 'பையர் ஸ்டோன்' என்போர் 1968ல் வாஷிங்டன் நகரில் மரபு வழிவந்த 'பெண்ணடிமையைக் குழிதோன்றிப் புதைப்போம்' என்ற கருத்தை வீதி நாடகமாக நடத்திக் காட்டினார்கள்.

12. 1970ல் சுயகருகலைப்பு உரிமை, சம கல்வி, சம வேலை வாய்ப்பை நியூயார்க் மாநாட்டில் கோரிக்கையாக வைத்தனர்.

13. 1972ல் வயதான பெண்களுக்கான விடுதலை அமைப்பு ஒன்று நிறுவப்பட்டது. வீட்டு வேலைக்கான ஊதிய உயர்வு கோரி இத்தாலிய பெண்ணியவாதிகள் போராடினர்.

14. 1977இல் லண்டனைச் சார்ந்த ஒரு குழு, 'ஏன் நீ மனைவியாக இருக்க வேண்டும் (Why be a wife) என்ற புதுமைப் போராட்டம் ஒன்றை நடத்தியது திருமணமான பெண்களின் கவனத்தை ஈர்த்தது.

15. 1979இல் 'லீட்ஸ் புரட்சிப் பெண்ணிய வாதிகள்' இருபால் சேர்க்கையை எதிர்த்து 'அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையியம்' என்ற கட்டுரையை 'வயர்ஸ்' இதழில் வெளியிட்டனர். இதில் பெண்ணிய வாதிகள் கட்டாயமாக ஆண்களோடு உறவு

Scanned with CamScanner

வைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறப்பட்டது. (Feminism is the theory and Lesbianism is the practice, Feminism is the complaint and lesbianism is the solution) அதாவது பெண்ணியம் என்பது கோட்பாடு. பெண் ஓரினக் சேர்க்கை என்பது செயல் முறை என்றும் பெண்ணியம் என்பது ஒரு முறையீடு அதற்குத் தீர்வு பெண் ஓரினச் சேர்க்கை என்றும் பிரகடனம் செய்தனர்.

16. 1980ல் பெண்ணியம் உலகளவிலான இயக்கமாக உறுப்பெற்றது. 1981ல் அனைத்துலகப் பெண்ணியக் கூட்டம் ஒன்று இஸ்ரேலில் ஹபியா என்ற இடத்தில் நடந்தது. இதில் ஐரோப்பா, இந்தியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் ஜப்பான், லத்தீன், அமெரிக்கா, வட அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பெண்ணியக் கல்வியாளர்களும், செயற் பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

17. 1981இல் தீவிரப் பெண்ணிய வாதிகளால் ஆண்களின் மூலம் குழந்தை பெறுவது தவறு என்று பேசப்பட்டது.

18. இவ்வாறு மேலை நாட்டுப் பெண்ணியம் தனியுரிமை, சமத்துவம், அரசியல் விடுதலை, தன்னாச்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் பெண்கள் தங்களின் தனித்தன்மையையும் சிறப்பையும் முழு அளவில் உணர வேண்டும் என்ற நிலையில் துவங்கியது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து தொடங்குகிறது. தொடக்கத்தில் சீர்திருத்தவாதிகளே பெண்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பாடுபட்டனர்.

1. இராசாராம் மோகன்ராய் ‘சதியை’ எதிர்த்தும் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்’, ‘விதவை மறுமணத்தை’ ஆதரித்தும், ராணடே, கார்வ் போன்றோர். ‘பெண்கல்வி வேண்டியும் சீர்திருத்தம் கொண்டுவர முற்பட்டனர்.

2. இதற்குமுன் 1886இல் கல்கத்தாவில் சுவர்ணகுமார தேவி ‘பிரம்ம சமாஜ்’ என்ற அமைப்பை நடத்தினார்கள். 1892இல் பண்டித ரமாபாய் சரஸ்வதி என்பவர் ‘சாரதா சதன்’ என்ற அமைப்பைத் தொடர்கிறார். 1903இல் ‘ஸ்ரீ சொரோஸ்திரியன் மண்டல்’ என்ற அமைப்பு பெண்களுக்கு உதவியது. 1908இல் குஜராத்தி இந்து ஸ்திரிமண்டல் அமைப்பும் இதுபோன்ற பல அமைப்புகளும் தோன்றி 1940 வரை பெண்களுக்கு உதவிவந்தன.

3. 1923இல் ‘ரோம்’ நகரில் நடந்த சர்வதேசப் பெண்கள் ஓட்டுரிமை ஒருங்கினைப்பின் கூட்டத்தில் இந்தியாவிலிருந்து திருமதி வினராஜதாஸ், திருமதி. ஹீராபாய்டாட்டா. போன்றோர் முதன் முதலில் பங்கு கொண்டனர்.

Scanned with CamScanner

4. விடுதலைப் போராட்ட காலத்தில் பெண்கள் தீவிரமாக கலந்து கொண்டனர்.

5. விடுதலைக்குப்பின், 1960 தொடங்கி இந்திய பெண்ணியப் போக்கில் பெறும் மாறுதல் ஏற்பட்டது. உழைத்துப் பிழைக்கும் மகளிர்க்காகப் பேராடினர். (வீழுதிபட்டேல் வீராங்கனை முதன்மையாளர்)

6. 1966இல் 'சப்த கன்னியர்' தலைமையில் 2000 பெண்கள் இராணுவத்தை எதிர்த்து மேற்கு வங்காளம், ஆந்திரம், பீகாரில் இருந்து கலந்து கொண்டனர்.

7. 1977இல் பெண்கள் அமைப்பை சோஷலிசவாதிகள் தொடங்கினர். (Self Employment Women's Association) அகமதாபாத்தில் Sewa (சேவா) என்ற இயக்கம் தொடங்கப்பட்டது.

8. 1975 முதல் 84 வரையிலான 10 ஆண்டுகள் பெண்களின் சிறப்பாண்டாக தருதப்பட்டன.

9. 1981இல் இந்திய 'மகளிரியில் கல்விக் கூட்டமைப்பு (Indian Association and Women Studies) ஏற்படுத்தப்பட்டது.

10. 1987இல் ராஜஸ்தானில் 'ரூப்கன்வர்' என்ற இளம் விதவையை உடன் கட்டை ஏற வைத்த நிகழ்ச்சியை பெண்ணிய அமைப்புகள் எதிர்த்தது.

11. 1988இல் பாட்னாவில் பெண் விடுதலைக் கருத்தரங்கம் (Women's Liberation Conference) நடத்தப்பெற்றது.

19. முதலில் வட இந்தியாவில் பெண்ணியவாதிகள் 1980ல் 'ஷபிர்' 'மேளா' ன்று அழைக்கப்படும் பெயர்களில் பெண்களுக்கான முகாம்களைப் பல இடங்களில் நடத்தினர். இங்கு பாலியல் பலாத்காரம், புராணக் கதைகள், காவியக் கதைகள், நாட்டுப்புறக்கதைகள் போன்றவற்றை விவாதித்தனர்.

20. இதன் பிறகு இந்தியாவில் பெண்ணிய அரங்குகள் மாநிலவாரியாகத் தோற்றம் பெற்றன.

தமிழ்நாட்டில் – (வாய்ஸிஸ் சைலன்ஸ்) மௌனக் குரல், பூமிகா, சுவாதி விடுதலை அரங்கம் சென்னைக் கலைக்குழு.

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| பாண்டிச்சேரியில் | – | புதுவை அறிவுச் சுடர்க்கலைக் குழு |
| கேரளாவில் | – | 'தேர்ட் ஐ' |
| ஆந்திரத்தில் | – | எத்னிக் ஆர்ட்சென்டர் |
| ஒரிசாவில் | – | நாட்டிய சேதனா |
| மகாராஷ்டிரத்தில் | – | 'ஸ்த்தி முக்தி சங்கடனா' |
| மேற்கு வங்காளத்தில் | – | 'ஜன சன்ஸ்க்ருதி' போன்றவை |

20. 1993இல் சென்னையில் 'தமிழகப் பெண்கள் எழுச்சிமையம்' 2 நாள் விழா நடத்தியத.

21. 1996ல் 'மௌனக்குரல்' அரங்கம் திருமதி. அ.மங்கை திருமதி. மீனா சுவாமிநாதன், வி.ஆர். தேவிகா அவர்களால் 'அகில இந்திய பெண்ணிய கருத்தரங்கம்' நடத்தப்பட்டது.

## சட்டங்கள் உருவான ஆண்டுகள்

| | | |
|---|---|---|
| 1829ல் | – | 'சதி' ஒழிப்புச்சட்டம் |
| 1856ல் | – | விதவை மறுமணச்சட்டம் |
| 1929ல் | – | குழந்தை மணத்தடைச்சட்டம் |
| 1937ல் | – | இந்துப் பெண்கள் சொத்துரிமைச்சட்டம் |
| 1940ல் | – | கலப்பு மணங்களை ஆதரிக்கும் சட்டம் |
| 1956ல் | – | விபச்சார தடைச்சட்டம் |
| 1961ல் | – | வரதட்சனை ஒழிப்புச்சட்டம் |
| 1961ல் | – | பேறு கால உதவி நிதிச்சட்டம் |
| 1968ல் | – | வரதட்சணைத் திருத்தச் சட்டம் |

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

1. பெண்ணியம் பொருள் விளக்கம் தருக

2. பெண்ணியத்தின் துவக்கம் எங்கு எப்போது?

3. வரதட்சனை ஒழிப்பு சட்டம் உருவான ஆண்டு எது?

## 19.6 தொகுப்புரை

பெண்ணியம் என்பது பெண்களை அரசியல், சமூகம் மற்றும் பொருளாதார அளவில் மேம் படுத்தும் கோட்பாடாகும். இதன் வேர்கள், வளர்ந்த, வளர்கின்ற நாடுகளில் வேறுபாடுகளின்றி ஊடுருவி உள்ளதை அறிய முடிகிறது. இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் சரியானப் பாதையில் இருக்குமாயின் பெண்களின் மேம்பாடு என்பது எளிதாக அடையக் கூடிய இலக்காகவே இருக்கும்.

## 19.7 முக்கியச் சொற்கள்

**பெண்ணியம்** : பெண்கள் மேம்பாடுப் பற்றிய கோட்பாடு.

## 19.6 தன்மதிப்பீட்டு விடைகள்

1. பிரிவு 19.4ல் காண்க.
2. இ.பி. 1400ல் ஐரோப்பாவில் துவங்கியது.
3. 1961

## 19.7 மாதிரி வினாக்கள்

1. பெண்ணியம் இயக்கங்களின் தோற்றம் வளர்ச்சியை ஆராய்க.
2. பெண்ணிய இயக்கங்கள் சமுதாயத்தின் மீது ஏற்படுத்தியிருக்கு தாக்கங்களை விவரிக்க.

Scanned with CamScanner